©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 139] CHENNAI, FRIDAY, MAY 14, 2010
Chithirai 31, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.**

**திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், தலையாம்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண் அ2/1481/2008.)*

**No. VI(2)/199(b)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 205, உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தலையாம்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கே. உஷாராணி என்பவர் ஊராட்சியின் ஊராட்சி மன்ற கூட்டத்திற்கான அஜண்டா முறையாக சார்வு செய்வதில்லை எனவும், நிதிகளில் ஊராட்சி நிதி கணக்கு எண்: II மற்றும் ஊராட்சி திட்ட நிதி கணக்கு III-ல் முறைகேடு செய்யப்பட்ட தொகை ரூ. 4,54,326/- மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சியின்) அனுமதியின்றி (Without Check Memo) தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியிலிருந்து மேற்படி ஊராட்சி மன்றத் தலைவரால் முறைகேடு செய்யப்பட்ட தொகை ரூ. 5,39,600/- ஐ தொகை பல்வேறு தேதிகளில் தேசிய ஊரக வேலை உறுதி திட்ட கணக்கில் மீள செலுத்தப்பட்டதன் பேரிலும், அன்னார் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தின் கருத்தினை பரிசீலனை செய்து, எனது உளத் தேர்வின்படி, தலையாம்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி கே. உஷாராணி என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 262(1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
**2010 மே 12.**

**மு. ராஜேந்திரன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-2 Ex. (139)